9-15 மணி

4. அறிவிப்பு.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1989–90 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றினைப் பேரவையின் 190-ஆவது விதிக்கு இணங்க 29–3–1990 வியாழக்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

5. விதி 109-இன் கீழ் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்.

மலிவு விலை மது மற்றும் மதுவிலக்குக் கொள்கை பற்றி அவையில் ஏற்கனவே பேசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் கீழ் தாம் பேசியவை குறித்து திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் விதி 109-இன் கீழ் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்கிறார்.

9-20 மணி

திரு. பி.வி. இராஜேந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த புதன் கிழமை அன்று நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் மலிவு விலை மதுவின் மீது கருத்துக்களைக் கூறியிருந்தேன். அதற்கு மறுநாள் மற்றொரு உறுப்பினர் பேசிய பொழுது, குறுக்கீடுகள் மூலமாக மதுவிலக்கில் அன்றைய தலைவர்கள் இன்று இருந்தால் என்ன நிலைமை எடுப்பார்கள் என்பது குறித்து சிலவற்றைக் கூறியிருந்தேன். இதனை சில பத்திரிகைகள், முதல் நாள் பேசியதற்குப் புறம்பானதாக என்னை மாற்றிக் கொண்டு பேசியிருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளன. மேலும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவையிலே, நான் முதல் நாள் பேசியதற்கு மாறாக காங்கிரஸ் கட்சியின் செயற் குழு நடவடிக்கைகளுக்குப் பயந்து நிலையை மாற்றிக் கொண்டேன் என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இதன் மீது என்னுடைய தன்னிலை விளக்கத்தை அவையின் விதி 109-ன் கீழ் அளிக்க, நீங்கள் அளித்துள்ள இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கின்றேன்.